**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்ற சாதாரணக்கூட்டம்**
**நாள். 28.02.2024 புதன்கிழமை நேரம் – காலை 11.00 மணி**

---

**மன்றப்பொருள்–1**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022–2023–இன் கீழ் உசிலம்பட்டி மாவட்ட தலைமை மருத்துவமனையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைக்கும் பணிகளுக்கு 19.01.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022–23–இன் கீழ் உசிலம்பட்டி மாவட்ட தலைமை மருத்துமனையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைத்தல் பணி | ரூ.6.00/– | M/s குரு டெக்னாலஜிஸ், மதுரை | 0.39% குறைவு |
| | | | M/s விநாயகா இன்ஜினியரிங், மதுரை | 1.01% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த M/s குரு டெக்னாலஜிஸ், மதுரை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1..மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண். 2176/2023/இ1)

**தீர்மானம் எண்.615**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள் –2**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க எண்11919/2022/EA–2 நாள் 29.01.2024இன் படி 15வது மத்திய நிதிக்குழு மானியத்திட்டம் 2024–25–இன் கீழ் பழுதடைந்த சாலைகளை ரூ.106.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க சீரமைக்கப்பட வேண்டிய சாலைகள் விபரம் கீழ்க்கண்டவாறு.

| **வரிசை எண்** | **Unicode** | **தெரு பெயர்** | **நீளம் (மீ)** | **மதிப்பீடு (இலட்சம்)** |
|---|---|---|---|---|
| **சிப்பம் 1 (தார் சாலை)** | | | | |
| 1 | **119002R012** | ஹவுசிங் போர்டு காலனி | 240.00 | 22.00 |
| 2 | **119012R054** | டி.இ.ஓ அலுவலக தெரு | 97.00 | |
| 3 | **119012R057** | டி.இ.ஓ அலுவலக தெரு | 48.00 | |
| | | மொத்தம் | **385.00** | **22.00** |

| சிப்பம் 2 (சிமெண்ட் சாலை மற்றும் தார்சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்றும் பணி) | | | | |
|---|---|---|---|---|
| 1 | **119001L001** | மாமரத்துப்பட்டி மேற்கு 3வது தெரு | 15.40 | 84.00 |
| 2 | **119001S007** | அரண்மனை தெரு | 6.00 | |
| 3 | **119001S002** | மாமரத்துப்பட்டி மேற்கு 2வது தெரு | 44.10 | |
| 4 | **119001S001** | மாமரத்துப்பட்டி மேற்கு 1வது தெரு | 45.50 | |
| 5 | **119006R178** | சத்யா நகர் 1வது தெரு | 210.00 | |
| 6 | **119006R179** | சத்யா நகர் 2வது தெரு | 210.00 | |
| 7 | **119005R177** | சொசைட்டி தெரு | 120.00 | |
| 8 | **119020R208** | குருசாமி கோவில் தெரு | 200.00 | |
| 9 | **119008R192** | காளியம்மன் கோவில் மெயின் தெரு | 215.00 | |
| 10 | **119007S157** | பாண்டி கோவில் தெற்கு 1வது தெரு | 140.00 | |
| 11 | **119023R247** | கவணம்பட்டி மெயின் ரோடு 1வது தெரு | 192.00 | |
| | | மொத்தம் | **1398.00** | **84.00** |

மேற்படி அரசு மானியத் தொகை ரூ.81.00 இலட்சம் போக கூடுதல் ரூ.25.00 இலட்சம் தொகையினை பொது நிதியில் ஈடுசெய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 2320/2023/இ1)

**தீர்மானம் எண்.616**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள் –3</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க எண் 5990/2022/SBM 2 நாள் 08.09.2023–இல் தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 2023–2024 –இன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 1 எண்ணம் சமுதாய கழிப்பிடம் ரூ.24.96 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள படி இந்நகராட்சி எல்லைக்குட்பபட்ட வார்டு எண் 15 கருக்கட்டான்பட்டி பகுதியில் சமுதாய கழிப்பிடம் ரூ.24.96 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 2492/2022/இ1 )

**தீர்மானம் எண்.617**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள் –4</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க எண் 18274/2022/EA–2 நாள். 20.02.2024–இல் 15–வது மத்திய நிதிக்குழு மானியம் 2022–

2023–ஆம் நிதியாண்டிற்கான Tied grant மற்றும் Un Tied Grant–இல் கீழ்க்கண்ட விபரபடி பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பணி விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 15வது மத்திய நிதிக்குழு மானிய திட்டம் 2022–23 (Tied Grant) | Supply and delivery of Submersible motors, UPVC Column Pipes, Cables for mini Power Pumps in Usilampatti Municipality | 11.18 |
| 2 | 15வது மத்திய நிதிக்குழு மானிய திட்டம் 2022–23 (Untied Grant) | Providing D system pipeline arrangements in municipal limit extension areas @ Usilampatti municipality | 7.66 |
| மொத்தம் | | | 18.84 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண். 195/2024/இ1 )

**தீர்மானம் எண்.618**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>**மன்றப்பொருள் –5**</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க எண் 4209/2024/P3 நாள் 15.02.2024–இல் குழந்தைகள் மற்றும இளம் பருவத்தினருக்கான நூலகங்கள் சிறப்பு உதவி திட்டம் 2023–24–இன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 12 உழவர் சந்தை அருகில் உள்ள முழு நேர நூலகத்தில் இணைப்பு கட்டிட பணிகள் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க எண் 313/2024/இ1 )

**தீர்மானம் எண்.619**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>**மன்றப்பொருள் –6**</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 3 வடகாட்டுப்பட்டியில் உள்ள கருத்த ஒச்சா தேவர் தெருவில் நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கோரிக்கையின் படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி போரவெல் மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு மேற்படி பணிகளை ரூ3.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 347/2024/இ1)

**தீர்மானம் எண்.620**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள் –7</u>**

உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி நகர்மன்ற கூட்டரங்கினை சிறப்பு மராமத்து பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு மேற்படி பணிகளை ரூ3.00/– இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண்348 /2024/இ1)

**தீர்மானம் எண்.621**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–8</u>**

உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற தலைவர் அறை அருகில் உள்ள கழிப்பறையை மராமத்து பணி மேற்கொள்ளவும், அலுவலகத்தில் குடிநீர் வசதி ஏற்படுத்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைக்கவும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு மேற்படி பணிகளை ரூ.2.50/– இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண்349 /2024/இ1)

**தீர்மானம் எண்.622**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–9</u>**

இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2022 – 2023–இன் கீழ் (சிப்பம் 3) ரூ.185.00 இலட்ச மதிப்பீட்டில் தார் சாலைகளாக மாற்றியமைக்கும் பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது. மதிப்பீட்டில் உள்ள கவணம்பட்டி சாலை, மூக்கையா தேவர் தெரு மற்றும் கனரா பேங்க் தெரு ஆகிய இடங்களில் ஏற்கனவே உள்ள பழைய தார்சாலையினை அகற்றி மீண்டும் புதிய தார்சாலையினை ஏற்கனவே உள்ள உயரத்தில் போடுமாறு 06.02.2024 அன்று பொதுமக்கள் வருவாய் கோட்டாட்சியர், உசிலம்பட்டி அவர்களிடம் புகார் தெரிவித்துள்ளனர். மேற்படி சிப்பம் 3–இல் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளில் கீழ்க்கண்ட சாலைகள் நல்ல நிலையில் உள்ளது.

1. விநாயகர் கோவில் தெரு– 117.00 மீட்டர்
2. மீனம்மாள் நகர் மெயின் ரோடு – 200.00 மீட்டர்
3. பாண்டி கோவில் மெயின் ரோடு – 220.00 மீட்டர்

4. பாண்டி கோவில் 2வது தெரு – 134.00 மீட்டர்

எனவே மேற்கண்ட பகுதிகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளை தவிர்த்து பொதுமக்கள் புகார் தெரிவித்த மதிப்பீட்டில் உள்ள கவணம்பட்டி சாலை, மூக்கையா தேவர் தெரு மற்றும் கனரா பேங்க தெரு ஆகிய இடங்களில் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத இனங்கள் (Milling) மூலம் பழைய தார்சாலையினை அகற்றி புதிய தார்சாலைகள் அமைக்கவும் மேற்படி பணிகளை மேற்கொள்ள உத்தேசமாக ரூ.8.00 (இலட்சம்) செலவுத் தொகையினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2110/2022/இ1

**தீர்மானம் எண்.623**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–10</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கவணம்பட்டி சமுதாய கழிப்பிடம் மற்றும அப்துல் கலாம் நகரில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் ஆகியவற்றில் போர்வெல் அமைத்து மராமத்து பணிகள் மேற்கொள்ள திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.10.00/– இலட்சம் மதிப்பீட்டில் திட்ட நிதியில் பணிகளை மேற்கொள்ளவும், கருக்கட்டான்பட்டி பகுதியில் கண்மாய் அருகில் உள்ள பெண்கள் சமுதாய கழிப்பிடம் மற்றும் மாரியம்மன் கோவில் அருகில் உள்ள பெண்கள் சமுதாய கழிப்பிடத்தினை மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.4.10/– இலட்சம் மதிப்பீட்டில் திட்ட நிதியில் பணிகளை மேற்கொள்ளவும், கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 349/2024/இ1

**தீர்மானம் எண்.624**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–11</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 20 திருவள்ளுவர் நகரில் உள்ள நாடக மேடையில் தட்டோடு பதித்தல், வர்ணம் பூசுதல் போன்ற பணிகளை ரூ.1.10 /– (இலட்சம் ) மதிப்பீட்டில் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 350/2024/இ1

**தீர்மானம் எண்.625**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–12</u>

உசிலம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.22 பேரையூர் ரோட்டில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடை M/S People Trust in Technical Institute திருமங்கலம் என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு எரியூட்டப்படும் பிரேதம் ஒன்றிற்கு

ரூ.3000/- மனுதாரர்களிடம் இருந்து வசூல் செய்து அதில் 40% நகராட்சி பங்குத்தொகையாக ரூ.1200/-நகராட்சிக்கு செலுத்தி வருகிறது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 28.02.2024ம் தேதி அன்று முடிவடைவதால் நவீன எரிவாயு தகனமேடை பராமரிக்கும் பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டு 01.03.2024 முதல் பணியினை மேற்கொள்ளுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0152/2024/எச்.1)

**தீர்மானம் எண்.626**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள் -13</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை வாகனம் எண்.TN58AS 3927 க்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை.ரூ |
|---|---|---|
| 1 | PILLAPPAN AUTOMOBILES Ramraj Cotton Mill, Madurai. | 61112 /- |
| 2 | RAM MOTORS Nagamalai Puthukottai,Madurai. | 84666/- |

மேற்காணும் விபரத்தின் படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள PILLAPPAN AUTOMOBILES MADURAI, நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்குவதற்கு மன்றத்ததின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2013/2023/எச்.1)

**தீர்மானம் எண்.627**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்-14</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரபிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் மேற்கொள்ள பயன்படுத்தப்படும் வாகனம் எண். TN58BW 1238-டிப்பர் லாரிக்கு பழுதுநீக்கம் ஏற்பட்டுள்ளதால் மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.13000-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 0168/2022/எச்.1)

**தீர்மானம் எண்.628**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள் –15</u>**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22 பேரையூர் ரோடு மயானத்தில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகனமேடையினை பராமரிக்கும் பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு எண்ணம் கொண்ட ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றது. விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | எரியூட்டப்படும் பிரேதம் ஒன்றிற்கான தொகை.ரூ |
|---|---|---|
| 1 | Peoples Trust in technical institue Thirumangalam Madurai. | ரூ.3000/– |

மேற்காணும் விபரத்தின் படி ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Peoples Trust in technical Institue Thirumangalam Madurai. நிறுவனம் தொண்டு நிறுவனமாக செயல்பட்டு வருவதாலும், ஏற்கனவே இப்பணியினை செய்து வருவதாலும் அந்நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

மன்றம் முடிவு செய்யலாம்

(ந.க.எண்.0152/2024/எச்.1)

**தீர்மானம் எண்.629**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–16</u>**

இந்நகராட்சி பொதுச்சுகாதாரப்பிரிவில் கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு, சிக்குன் குனியா, மலேரியா போன்ற நோய்கள் பரவுவதை தடுக்கவும், கொசுப்புழுக்கள் உற்பத்தியாவதை தடுக்கவும், ஏற்கனவே 36 DBC பணியாளர்கள் M/s. தேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி மூலம் 31.03.2024 வரை ந.க.எண். 91/2015/எச்.1 நகர்மன்ற தீர்மானம் எண்.610 நாள்.19.01.2024–இன்படி தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். பொதுச்சுகாதாரப்பணியினை கருத்தில் கொண்டும், டெங்கு மற்றும் மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கவும், இதே M/s.தேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி மூலம் 36 DBC பணியாளர்கள் பணிகளை மேற்கொள்ள 01.04.2024 முதல் 30.09.2024 வரை ஆறு மாதங்களுக்கு மட்டும் அனுமதி வழங்குவற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.24.00 இலட்சம் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 91/2015/எச்.1)

**தீர்மானம் எண்.630**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்–17</u>**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகாவில் உள்ள உசிலம்பட்டி நகராட்சியானது உசிலம்பட்டி பேரூராட்சியிலிருந்து 11.12.1995–இல் உசிலம்பட்டி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அரசாணை எண். 49–இன்படி உசிலம்பட்டி நகராட்சி மலையிட பாதுகாப்பு குழும பகுதியில் அமைகிறது. மேற்கே மலைகள் இருக்கும் இடத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. மலைப்பிரதேசமாக இல்லை. முழுவதும் தரைத்தளமாக உள்ளது. உசிலம்பட்டி நகராட்சி தற்பொழுது வளர்ச்சி அடைந்து வருகிறது. கொடைக்கானல் ஊட்டி போன்ற ஊர்களைப்போல் மலைக்குள்ளே அல்லது மலையின் மீதோ வளர்ச்சி அடையவில்லை. உசிலம்பட்டி நகராட்சிக்கு 10 கி.மீ. தள்ளியே மலைகள் உள்ளதால் மலையிட பாதுகாப்பு குழும பகுதியில் இருந்து உசிலம்பட்டி நகராட்சிக்கு விலக்கு அளிக்க அரசுக்கு கடிதம் வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். /2023/எப்1.)

**தீர்மானம் எண்.631**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–18</u>**

இந்நகராட்சி 2022–23–ஆம் நிதி ஆண்டிற்கு வருவாய் மூலதன நிதி மற்றும் குடிநீர் வழங்கல் நிதிக்கான ஆண்டுக்கணக்கினை இயல்பு நிலை கணக்கு முறையில் UTIS மென்பொருளில் தயார் செய்தமைக்கு உரிய சேவைக்கட்டணம் தொகை ரூ. 50,000/– மட்டும் Sanjay Solutions நிறுவனத்தின் உரிமதாரருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு:–</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்

2). ஆண்டுக்கணக்கு முடிக்க வேண்டியதன் அவசியம் கருதி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 2426/2023/பி1)

**தீர்மானம் எண்.632**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள் –19</u>**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண்.5–இல் திரு மகேஷ்வரி க/பெ. அதியமான என்பவருக்கு காலியிடமனை வரிவிதிப்பு எண்கள். 119/005/900906, 119/005/900939 என்று இரட்டை பதிவு எண்ணாக உள்ளது. எனவே, ஒரு காலியிடவரிவிதிப்பு எண். 119/005/900939–ஐ என்ற காலியிடவரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யவதற்கும்,

| வ.எ | பெயர் மற்றும் முகவரி | நீக்கம் செய்யப்பட வேண்டிய காலியிடவரி விதிப்பு எண் | ஆண்டு | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | மகேஷ்வரி<br>க/பெ. அதியமான் | 119/005/900939 | 2017-18 I, II to<br>2023-24-I, II | 13549 |

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17–இல் இயங்கிவந்த வி கே எஸ் அகாடமி மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி பேரையூர் ரோடு, உசிலம்பட்டி இயங்கி வந்த

சொத்தானது தற்பொழுது இடிக்கப்பட்டு காலிமனையாக உள்ளது. எனவே, கீழ்க்கண்ட சொத்துவரிவிதிப்பு எண்களை நீக்கம் செய்யவதற்கும்,

| வ.எ | சொத்துவரி விதிப்பு எண் | பெயர் மற்றும் முகவரி | ஆண்டு | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 119/017/900521 | தாளாளர் வி கே எஸ் அகாடமி மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி | 2023-24 I & II | 17836 |
| 2 | 119/017/900522 | தாளாளர் வி கே எஸ் அகாடமி மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி | 2023-24 I & II | 14546 |

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 24 வார்டுகளில் தொழில்வரிவிதிப்பு செய்யப்பட்ட எண்களில் சில எண்கள் உள்ள கடைகள், அலுவலகங்கள், நிறுவனங்கள் வேறு இடங்களில் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சில இடங்களில் கடையினை காலி செய்து உள்ளனர். இதனால் அதிகமான கேட்புகள் இருந்த வண்ணம் உள்ளது எனவே, தொழில்வரி விதிப்புகள் ரத்து செய்யப்படாமல் உள்ளதை நீக்கம் செய்யுமாறு வருவாய் உதவியாளர்கள் கோரியதன் அடிப்படையில் கீழ்க்கண்ட பட்டியல் உள்ள தொகைகள் நிலுவையில் இருந்து வருவதை நீக்கம் செய்யலாம். கீழ்க்கண்ட பட்டியல் உள்ள தொழில்வரி எண்களையும், கேட்பு தொகையினையும் நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எ | நீக்கம் செய்யப்பட வேண்டிய தொழில் வரிவிதிப்பு எண் | வரிவிதிப்பு பெயர் மற்றும் முகவரி | மொத்தம் | நீக்கம் செய்யப்பட வேண்டிய காரணம் |
|---|---|---|---|---|
| 1 | 119/020/900103 | DR. RAJKUMAR MATHI CLINIC, USILAMPATTI | 791 | இடமாற்றம் |
| 2 | 119/000/900004 | SUBBIAH | 150 | இடமாற்றம் |
| | 119/000/900014 | SUBBIAH | 150 | இடமாற்றம் |
| | 119/000/900015 | SUBBIAH | 160 | இடமாற்றம் |
| | 119/021/900029 | THANGAMAYIL JEWELLERY LIMITED | 1250 | இடமாற்றம் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1775/2021/அ1)

**தீர்மானம் எண்.633**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-20</u>

இந்நகராட்சி அனைத்து சேமநலநிதி பணியாளர்களுக்கு 2019-20 வரை சேமநலநிதி வட்டி பெறப்பட்டுள்ளது. 2020-21 முதல் 2022-23 வரை சேமநலநிதி வட்டி கோரி பிரேரணை தயார் செய்யப்பட்டமைக்கு உரிய செலவினத்தொகை மற்றும் 5 எண்ணம் கணக்கிட்டு படிவங்கள் தயார் செய்தமைக்குரிய செலவினத்தை ரூ. 5925/- மட்டும் அன்னை அங்காளீஸ்வரி கம்ப்யூட்டர் சென்டர் மதுரை நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 2359/2018/பி1)

**தீர்மானம் எண்.634**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–21</u>

இந்நகராட்சி அலுவலகத்திற்கு 2023–2024–ஆம் ஆண்டுக்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் ஏ4 வெள்ளை பேப்பர் கொள்முதல் செய்யப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ. 26719/–ஐ THE MADURAI DISTRICT PRINTERS SERVICE INDUSTRIAL CO–OPERATIVE SOCIETY LTD மதுரை அவர்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1).மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). எழுதுபொருட்களின் அவசர அவசியம் கருதி பொருட்கள் பெறப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.635**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–22</u>

உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தின் உள்ள உபயோகத்திற்கு ஏ4 வெள்ளை பேப்பர் 50 எண்ணம் பேப்பர் வாங்கியதற்கு பட்டியல் தொகை ரூ. 19681/– மட்டும் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 259/2024/பி2)

**தீர்மானம் எண்.636**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–23</u>

உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள குடியரசு தின விழாவிற்கு வண்ண விளக்கு சீரியல் மற்றும் மைக்செட் அமைத்து தரப்பட்டுள்ளது. அதற்கான செலவினம் ரூ.19200/– மட்டும் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 957/2024/பி2)

**தீர்மானம் எண்.637**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

நகர்மன்றதலைவர்,
உசிலம்பட்டி நகராட்சி